பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸ்ரீ சித்திரை 28 ௳ சனிக்கிழமை [11—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 158

# மடு அகதிகளுக்கு பட்டினி அபாயம்!

## பாதுகாப்பு உத்தரவாதம் கிடைக்காததால் உணவு எடுத்துச் செல்வதில் தடங்கல்

யாழ்ப்பாணம், மே 11

மடு அகதி முகாமில் உள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்குள்ள அகதிகள் பட்டினி கிடக்கும் நிலை உருவாகலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள அகதிகளுக்கு இன்னும் ஒரு வாரத்துக்குப் போதுமான உணவுப் பொருள்களே கைவசம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பாதுகாப்புக்கு அரசின் உத்தரவாதம் கிடைக்கும் பட்சத்திலேயே அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் உணவுப்பொருள் எடுத்துச் செல்வர் என்றும்—

அதற்காக அவர்கள் ஜனாதிபதியின் பதிலை எதிர்பார்த்திருக்கின்றனர் என்றும்—

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் மடுவில் உள்ள அகதிகள் உணவு பெறுவதில் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கி உள்ளனர். இன்னும் சில தினங்களில் அங்கு உணவுப் பொருட்கள் சென்றடையாதவிடத்து, அகதிகள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என அறிவிக்கப்படுகிறது.

* ஐ. நா. தூதராலய வாகன அணி மற்றும் பணியாட்களது பாதுகாப்பு தொடர்பாக ஜனாதிபதி அளிக்கும் உறுதி மொழியைப் பொறுத்தே மடுப்பகுதிக்கு இனிமேல் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்று ஐ. நா. தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனராம்.

பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் குறித்து விசாரிக்க தனி நபர் ஆணைக்குழு ஒன்றினை நியமித்திருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால் அண்மையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதராலயத்தைச் சேர்ந்த வாகன

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 3 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, மே 11

வவுனியா மாவட்டம் மருதங்குளம் பகுதியில் நடந்த மோதலில் ஸ்ரீலங்கா படையினர் மூவர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

## கட்டுவனில் மோதல்

யாழ்ப்பாணம், மே 11

கட்டுவன் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

சுமார் 30 நிமிட நேரம் துப்பாக்கிச் சமரும் இடம் பெற்றது.

ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. [உ-15]

## சுழிபுரம் கடற்பகுதியில் பீரங்கி, குண்டுச்சத்தங்கள்

### காவல் கொட்டில்களும் தீக்கிரை

சுழிபுரம், மே 11

சுழிபுரம், சம்பித்துறைக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் பீரங்கிச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுவெடிச் சத்தங்களும் கேட்டன. அதே சமயம் காரைநகர் முகாமில் இருந்து கடும் ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

பொன்னாலைச் சுடலைப் பகுதியிலும், திருவடிநிலை கரையோரப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### எதிர்வரும் ஜூலை மாதம்

## தமிழீழ ஆராய்ச்சி மாநாடு அமெரிக்காவில் நடக்கும்

சர்வதேச தமிழ் ஈழம் ஆராய்ச்சி மாநாடு எதிர்வரும் ஜூலை 20, 21 ஆம் திகதிகளில் கலிபோர்னியா மாநில பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

குடியேற்ற காலத்துக்கு முந்திய, பிந்திய தமிழீழ மக்களின் அரசியல் வரலாறு—

அரச குடியேற்றங்களால் தமிழர் தாயகம் அபகரிக்கப்பட்டமை—

பொருளாதார மற்றும் சட்ட ரீதியான தமிழர் மீது இழைக்கப்பட்ட பாரபட்சங்கள்—

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை—

தமிழீழத்தின் பொருளாதார வளங்கள்—

முதலிய தலைப்புகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் இம் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிகிறது.

## வடக்கில் ஸ்ரீலங்கா ஆட்சிக்கு இனிமேல் வாய்ப்பே இல்லை!

### லண்டன் பிரபுக்கள் சபையில் உரை

லண்டன், மே 11

இலங்கை - வடக்குப் பகுதியில் கொழும்பு அரசு மீண்டும் தனது நேரடி ஆட்சியை நிலை நாட்டமுடியாது.

அவெபரி பிரபு லண்டனில் பிரபுக்கள் சபையில் [House of Lords] பேசுகையில் முன் கண்டவாறு கூறினார்.

இதே கருத்தைத்தான் கொழும்பில் உள்ள மேற்கு நாட்டுத் தூதர்களும் தனிப்பட்ட ரீதியில் வெளியிட்டுள்ளனர் என்று 'தமிழ் நேஷன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. [உ-எ]

## விடுதலைப் புலிகளின் பின்னால் மக்கள் அணி திரண்டுள்ளனர்

### யாழ். வந்த சுவிடிஷ் பேராசிரியர் தகவல்

லண்டன், மே 11

"விடுதலைப் புலிகளின் பின்னால் தமிழ் மக்கள் அணி திரண்டுள்ளனர்."

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்கிருந்து திரும்பிய சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீற்றர் ஷோக் [Peter Schalk] இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஜனவரி 22 முதல் பெப்ரவரி முதலாம் திகதி வரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். யாழ் நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எவ்வகையான மருந்துகள் யாழ்ப்பாணம் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை இராணுவத்தினர் தான் தீர்மானிக்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும்.

இளம்பிள்ளைவாதத் தடுப்பு ஊசி மருந்துகளையும் யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல இராணுவம் தடை விதித்துள்ளது.

பெற்றோல், மண்ணெண்ணை, மின்சாரம் முதலியன வடக்கில் கிடைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இத் தடை காரணமாக மக்கள் வறுமை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாப் பகுதி மோதலில் 'பவள்' வாகனம் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், மே 11

நேற்று முன்தினம் காலை 9-30 மணியளவில் வவுனியா, கோழியகுளம் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் பூவரசங்குளம் நோக்கி முன்னேற முயன்றனர்.

அச்சமயம் இடையில் ஓரிடத்தில் விடுதலைப் புலிகள் படையினரை வழிமறித்து சுமார் அரை மணித்தியாலம் கடுமையாகத் தாக்கினர். எனினும் அவர்கள் இழப்புகளுடன் பூவரசங்குளம் சென்றடைந்தனர்.

பிற்பகல் 2-45 மணியளவில் அங்கிருந்து பவள் கவச வாகனம், டிரக், டோசர்கள் சகிதம் படையினர் பாலமோட்டை நோக்கி முன்னேற முயன்றனர்.

அப்போது மாதர்பணிக்கர் மகிழங்குளம் பாடசாலைக்கு அருகில் வைத்து கடும் சண்டை மூண்டது. சுமார் இரண்டரை மணி நேரத்துக்கு மேலாக நடந்த சண்டையின் போது விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதலையும் நடத்தினர்.

இதில் "பவள்" கவச வாகனம் பலத்த சேதமடைந்தது. படையினர் அந்த வாகனத்தை ட்ராக்டருடன் கட்டி இழுத்து ...

[...]

## இளைமோர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 11

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு மாவட்டம், முறக்கொட்டாஞ்சேனை முகாமில் இருந்த படையினர் வெளியேறி சித்தாண்டி நோக்கி முன்னேறுகையில், விடுதலைப் புலிகள் இளைமோர் தாக்குதலை நடத்தினர்.

படையினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து விவரம் தெரியவரவில்லை. [ஒ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 11

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் நடந்த வெடி விபத்துச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ஜனகன் [தம்பலகமம்] வீரமரணம் அடைந்தார். [ஒ]

## இன்று தேர்தல்

கொழும்பு, மே 11

தென்னிலங்கையில் இன்று உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மிகவும் சுறுசுறுப்புடன் நடைபெற இருக்கின்றன.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் பதினேழு மாவட்டங்களிலும் தேர்தல்கள் இடம்பெறும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் இன்று நடக்கும் தேர்தல்கள் ஒரு "குட்டி"ப் பொதுத் தேர்தல் போன்று இருக்கும்.

இந்தத் தேர்தல்களுக்காக அனைத்து கட்சிகளும் முழு மூச்சுடன் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தன என்பது தெரிந்ததே.

இதே வேளை: வாக்குப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பிரெஞ்சு அரசின் கண்டனம் ஸ்ரீலங்காவுக்குத் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

வவுனியாவுக்கு அருகே ஹெலி, பொம்மர் தாக்குதலில் பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக பிரெஞ்சு அரசாங்கம் இலங்கை அரசிடம் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது போன்று மீண்டும் அசம்பாவிதங்கள் இடம்பெறுமானால் அது இரு நாடுகளின் உறவுகளையும் வெகுவாகப் பாதிக்கும் என்றும் பிரெஞ்சு அரசு தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது.

இந்த ஆட்சேபனைக் குறிப்பை கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதர் வெளியுறவு அமைச்சிடம் கையளித்தார்.

இத்தகவல்களை கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் நேற்று வெளியிட்டது. [உ-எ]

## ஆணையாளராக அல்விஸ்

கொழும்பு, மே 11

பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்த ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. லூசியன் ஹெக்டர் டீ அல்விஸை தனி நபர் ஆணையாளராக ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று நியமித்தார்.

அச்சம்பவம் பற்றி விசாரித்து பத்து நாட்களுக்குள் அது பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்கும்படி ஆணையாளர் பணிக்கப்பட்டுள்ளார்.

ஹெலித்தாக்குதல் நடத்தப்பட்ட சூழ்நிலை, விமானப் படையினர் தவறான முறையில் நடந்து கொண்டார்களா? அவர்கள் விட்ட தவறுகள், குற்றங்கள் எவை?, அப்படி அவர்கள் குற்றங்கள் இழைத்திருப்பின் அவர்கள் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள், இது போன்ற அசம்பாவிதங்கள் மீண்டும் இடம்பெறாமல் இருக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை பற்றி சிபார்சு செய்யும்படி ஆணையாளரை ஜனாதிபதி பிரேமதாஸா பணித்திருக்கிறார். [உ-எ]

## முச்சந்தி முரளி



உலைவதானே தவித்த தவி தேசங்களை தங்கடை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சோயா விதை தேவை: இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அண்ணா பரம், இணுவில். [சி 4922]

ஸ்ரீசு, கபேட், மரக்கபேட், சோக்கேஸ், கவுண்டர் மேசைகள், சாப்பாட்டு மேசைகள், தையல் மெஷின், றேடியோ, கடைக்குரிய தளபாடங்கள், பனை மரங்கள், வீட்டுக் கதவுகள், யன்னல்கள், லாஸ்குச்சர் என்பன விற்பனைக்குண்டு தொடர்பு 07, கைலாசபிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [16781]

### மலிவு விற்பனை

சகல பொருள்களும் சகாய விலைக்கு முழுமையாக கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். நியூ மல் செரமிக்ஸ், 37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16774]

### மணமகள் தேவை

யாழ். சத்தோலிக்க மாதாந்தம் 5000/- வருமானமுள்ள, 28 வயதுடைய அழகிய மகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 40, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். [16754]

### மணமகன் தேவை

இந்து மதத்தைச் சேர்ந்த 26 வயதுடைய A/L படித்த அழகிய மணமகளுக்கு பட்டதாரி, வங்கி மற்றும் அரசாங்க தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. நாலில் செவ்வாய் தகுதிக்கேற்ற சீதனம் வழங்கப்படும். இல. 805, C/o உதயன். [4063]

### றோணியோ வேலை

தெளிவான எழுத்துப் பிழையற்ற றோணியோ தட்டச்சு வேலைகளுக்கு Teens Copy [Bond Book Stall], 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். காலை 6-00 மணி முதல் மாலை 6-30 மணிவரை திறந்திருக்கும். [16660]

### கோழித்தீன்

எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும், முட்டையிடும் கோழிகளுக்கான உணவு விற்பனைக்குண்டு. 25 கிலோ பைக்கெட் ஒன்றின் விலை ரூபா 400/- யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-4995]

### திருமண சேவை

வெள்ளவத்தை மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி 'சுகிர்தாஸ்' [திருமண சேவை] என மாற்றியுள்ளோம் முற்பணம் கட்டி குறிப்பு தந்தவர்கள் தொடர்பு கொள்ளவும் தடையோது விவாகம் நடைபெறக் கூடிய பலனுள்ள முற்பணம் கட்ட விருப்ப மானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் சுகிர்தாஸ் 146 [402], பருத்தித்துறை வீதி, நல்லூர். [16783]

### ஜோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் தீர ஆலோசனைகளும் கல்வி, விவாகம், தொழில் ஆகியவற்றின் தடைகளுக்கான நிவர்த்திக்கான சாந்தி பரிகாரங்களும் கூறப்படும், பலன்கள் தவறினால் பணம் திருப்பப் பெறப்படும். பூரி மாவை விநாயகர் சோதிட நிலையம் 146 [402] பருத்தித்துறை வீதி, [அரசடிச்சந்தி] நல்லூர், [16782]

### ஆங்கிலக் கல்வி

G. C. E. [O/L] 90 ஆங்கில வினாத்தாள் விசேட வகுப்புகளும், ஆண்டு 1, 2, 3, 4 களுக்கான சொற்பொழிவு கலையும் [Elocution] மாணவர்களின் வசதிகளுக்கேற்ப விரைவில் ஆரம்பமாகவுள்ளன. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி, அந்தர்மடம். [16787]

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப்பட்டவர்களுக்கான ஆரம்ப அறிவிலிருந்து நடத்தப்படும் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் தினமும் காலை 10-00 மாலை 2-00 மணி வரை நடைபெறும். உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். S. ஜெயராஜா 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [16572]

### வகுப்புகள்

Typing, Short-Hand வகுப்புகள் வார நாட்களில் வார இறுதி நாட்களில் இரு பிரிவுகளாக 2-5-1991 முதல் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிந்ததும் சான்றிதழ்கள் வழங்கப்படும். Bond கல்வி நிறுவனம், 58A. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [16659]

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ் [புதிய விசைப் பலகை New Key Board] ஆங்கிலம் ரைப்பிங் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன, பியூட்டா, 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [பஸ்நிலைய முன்பாக] கிளை: பிரதான வீதி, மானிப்பாய் [சி/4968]

### பரீட்சை (ஆண்டு 4)

புதிய கல்வி நிலையத்தால் நடத்தப்படும் ஆண்டு 4 [புலமைப் பரிசிலுக்கான அடிப்படை பரீட்சை] முதலாவது 12-05-91 ஞாயிறு மு. ப. 8-00, பி. ப 1-00 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5 [2 ஆவது பரீட்சை] 19-05-91 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 10-30 மணிக்கு நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16761]

### தவறிவிட்டது

A 36132 இலக்க லுமாலா சைக்கிள் மின்சார நிலைய வீதி, 3 வது ஒழுங்கையில் தவறிவிட்டது கண்டவர்கள் அல்லது வைத்திருப்பவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். ''சந்திராஸ்'' 62, 63, நவீன சந்தை, யாழ்ப்பாணம் [சி/4062]

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

வீட்டுச் சலவைக்கு அதி தீவிர சக்தி கொண்ட மில்க்வைற் திரவ சவர்க்காரம் அழுக்கைப் போக்குவதில் அதி சிறந்தது. அரைப் போத்தல் ரூ 45/- மட்டுமே மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி/4988]

### வைத்தியம்

வேலணை வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே. பி. அவர்கள் இல. 121, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வைத்திய சாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார். சகல நோய்களுக்கும் எந்நேரத்திலும் சிகிச்சை அளிக்கப்படும் [4067]

---

## கணக்கியற் கல்லூரி

(பழைய கேம்பிறிச் கல்வி நிலையம்)

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி. [மேல்மாடி]

A/L 92 கணக்கியல் புதிய பிரிவு
ஆரம்பம்: 16 — 05 — 1991
மாலை 4 மணி

A/L 91 கணக்கியல் வினா - விடை வகுப்பு
ஆரம்பம்: 14 — 05 — 1991
மாலை 4 மணி

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்:

### திரு. V. உருத்திரசிங்கம்

மு. குறிப்பு: A/L 92க்கான முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும். [16790]

---

## ECALOM

மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

20 வருட வினா-விடை

### பொருளியல்:- உதயன்

பிரிவு I (சந்தை சமநிலை)
செவ்., புதன் — காலை 6-30

பிரிவு II (புதிய பிரிவு)
ஆரம்பம்: (11 — 05 — 1991)
சனி, ஞாயிறு — 4-00 மணி
(உற்பத்தி சாத்திய வளையி)

பகுதி I விலை கட்டெண்
சனி — 2-30 மணி

பகுதி II வெளிநாட்டு வர்த்தகம்
ஞாயிறு — 2-30 மணி

★ மாணவர் தொகை 100 பேர் மட்டுமே ஏற்கப்படும். [4059]

---

## நன்றி நவிலல்

30-3-1991 இல் காலமான எமது குடும்பத் தலைவர் நாகலிங்கம் விஜயராஜா அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், நேரில் கலந்து கொண்டவர்கள், பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், பின்னர் 29-4-1991 இல் எமது இல்லத்தில் நடைபெற்ற வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். [16186]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 3-3-1925

மறைவு: 11-5-1987

### M. சிமியாம்பிள்ளை

[முன்னாள் யாழ் கல்விப்பணிப்பாளர்]

எங்கள் குலவிளக்கே எந்தையே எம்முயிரே
உங்கள் நினைவாய் நான்காண்டு கழிந்தனதயா
தங்களை நினைத்திருப்போம் தரணியில் என்றும்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகிறோம்.

நித்தம் உங்கள் நினைவுடன் வாழும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[16756]

---

## கொக்குவில் இந்துக் கல்லூரி சேவை நலம் பாராட்டு விழாவும் வரவேற்பு வைபவமும்

அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் யாழ். இந்துக் கல்லூரிக்கு அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளமையும், திரு. இ. மகேந்திரன் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்றுள்ளதையும் முன்னிட்டு நடைபெற இருக்கும் மதிய போசன விருந்தில் பங்கு பற்ற விரும்புவோர் தயவுசெய்து 25-05-91க்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. பொ. சந்திரநாதன், செயலாளர், பழைய மாணவர் சங்கம்

திரு. து. வைத்திலிங்கம், செயலாளர், பாடசாலை அபிவிருத்தி சபை.

கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். [16773]

---

## கலை, வர்த்தகக் கல்லூரி

### C. C. A.

[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]

யாழ்ப்பாணம்

### G. C. E. A/L 92

பிரிவு 2

ஆரம்பம்: 11 - 05 - 1991

சனிக்கிழமை காலை 8-00 மணி [4926]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் A. R. சண்முகலிங்கம்

[கெங்கநாதன்]

[முன்னாள் யாழ் புகையிரத நிலைய அதிபர், (Former Jaffna Railway Station master)]

தோற்றம்: 20 - 03 - 1937

மறைவு: 11 - 05 1990

தென்றலில் தவழ்ந்தவொரு
தேன் மலர் வீழ்ந்ததம்மா
தேனினும் இனிமை கொண்ட
ஓர் குணம் வாய்ந்த தம்மா
காரிருளில் தேய்ந்து மறைந்தது ஓர் நிலவு!
கலை மறைந்தது ஓர் உதயம்!
காலங்கள் சாய
சாய்த்து நிற்பவர்களிடையே
உலவிய அந்தத் தென்றலின் தரம் நிரந்தரம்

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி
தர்மரஞ்சிதம் - சண்முகலிங்கம்,
உறவினர்கள்.

56, பலாலி றோட்,
அந்தர்மடம், யாழ்ப்பாணம். [16708]

# உதயன்

## முன்னர் என்ன, பின்னர் என்ன..!

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கு, இலங்கையின் பகுதி என்று அரசாங்கமே கருதவில்லை! அவ்வாறு கருதியிருந்தால், நாடுமுழுவதிலும் ஒன்றாகவல்லவா உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியிருக்கும்!

அதன் பொருட்டு, வடக்கு-கிழக்கில் அமைதியை உருவாக்குவதற்காக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கும். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது தமிழர்களின் உரிமைகளை வழங்குவதாகும்.

தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளும் உரிமையை, ஒரு தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை, தனியரசு நிறுவும் உரிமையை. தங்களையும் தமது மண்ணையும் பாதுகாக்கும் உரிமையை. தங்கள் அலுவல்களைத் தாமே நிர்வகித்து தமது வாழ்க்கை நிலையை விருத்தி செய்யும் உரிமையை, சுதந்திரத்தைக் கேட்கிறார்கள். அதற்காகக் கடந்த 43 வருடங்களாகப் போராடி வருகிறார்கள்.

தமிழர்களின் இந்தக் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் முன் வைக்கும் தீர்வு என்ன? சிங்கள மக்கள் அதற்கு உடன்பாடாக உள்ளார்களா? தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்குச் சம்மதமா? - இவை தெரிந்தால் மட்டுமே தீர்வுக்கான பாதையில் ஓர் அடியையாவது எடுத்து வைக்க முடியும்!?

ஆனால் ஜனாதிபதியோ, உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னரே தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தாம் அக்கறை செலுத்தப் போவதாக கூறியிருந்தார். அது எப்படியோ......?

தமிழர்கள், இடைக்காலத் தீர்வாகவேனும், சமஷ்டி அமைப்பின் கீழான தன்னாட்சி அதிகாரம் கிடைக்காமல் தமது உரிமைப்போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. 43 வருடப் போராட்டத்தின் பின்னர், லட்சக்கணக்கான மக்களையும், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான உடைமைகளையும், பெரும் நிலப்பரப்பையும் இழந்த பின்னர் சுயாட்சி இல்லாத எந்தத் தீர்வையும் ஏற்க முடியாது; ஏற்கக் கூடாது; ஏற்றுக் கொள்ள நியாயமும் இல்லை.

ஒற்றையாட்சி அரசியலமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டு வருவதற்கு அரசமைப்புச் சட்டம் மாற்றப்பட்டாக வேண்டும். அவ்வாறு மாற்றுவதற்கு அரசுக்கு - ஜனாதிபதிக்கு - மூன்றில் இரண்டு நாடாளுமன்றப் பலம் வேண்டும். அது தான் இல்லையே! பின்னர் பிரேமதாச எவ்வாறு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறார் - தீர்க்க முடியும்? எனவே இன்றைய தேர்தலுக்கு முன்னர் என்ன, பின்னர் என்ன எல்லாம் ஒன்று தான்!

நாட்டின் அரசமைப்பை சமஷ்டி முறைக்கு மாற்றி தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகச் சிங்கள மக்களுக்குக் கூறுவதற்கும், அவர்கள் ஆதரவைப் பெறுவதற்கும் உள்ளூராட்சித் தேர்தலை ஜனாதிபதி பயன்படுத்தி இருக்கலாம். ஒரு சோதனை செய்தாவது [Risk] பார்த்திருக்கலாம். சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகக் கூறுவது அர்த்தமற்றது. செயலளவில் சரிப்பட்டு வராதது. வெறும் சாலம் வாங்கும் உத்தியே அன்றி வேறில்லை.

## மன்னாரிலும் ஊரடங்கு

கொழும்பு, மே 11

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை-

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளிலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரம் மற்றும் சிங்கள உதவி அரச அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் கடந்த 3 ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

[இ-எ]

## ரூ. 5,000 அபராதம்

தென்மராட்சி, மே 11

சன்லைட் சவர்க்காரம் ஒன்றை இருபது ரூபாவுக்கு விற்பனை செய்த சாவகச்சேரி வர்த்தகர் ஒருவர் கண்காணிப்புக் குழுவினரால் பிடிக்கப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் செயலகத்தில் இவர் ஒப்படைக்கப்பட்டு ரூபா 5000/- அபராதம் விதிக்கப்பட்டது.

சன்லைட் கட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

[இ-117]

## தேர்தல் கண்காணிப்பு குழுத் தலைவர்

கொழும்பு மே 11

உள்ளூராட்சித் தேர்தல்களை கண்காணிப்பதற்கு வந்துள்ள சர்வதேச அவதானிகள் குழுவின் தலைவராக ஆஸ்திரேலியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் மக்மில்லன் பணிபுரிவார்.

இவர் தலைமையில் அவதானிப்புக் குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி பிரேமதாஸவைச் சந்தித்துப் பேசினர்.

[இ-எ]

## கைதடியில் அந்தர்யோகம்

யாழ்ப்பாணம் மே 11

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் அந்தர்யோகம் அனுஷ்டானம் நடைபெறவுள்ளது.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெறும் இந்த அனுஷ்டானம் காலை 8-25 மணிக்கு ஆரம்பமாகும்.

[த]

## நாடக விழா

யாழ்ப்பாணம், மே 11

''சண்டி அரசன்'' சரித்திர நாடகமும் [நாட்டுக் கூத்து] காலதேவனின் சுடும் தவம் என்னும் போர்க்கால இசை நாடகமும் இன்று சனிக்கிழமை இரவு 7 00 மணிக்கு பாஷையூர் ஆசிரியர் செபஸ்ரியன் வருந் தமிழ் அரங்கில் நடைபெறும்.

[இ]

## நாடாளுமன்றம் 14 இல் கூடுகிறது

கொழும்பு, மே 11

நாடாளுமன்றம் இம்மாதம் 14 ஆம் திகதி கூடவிருக்கிறது.

## நினைவு விழாவும் சிறுவர் தினமும்

யாழ்ப்பாணம், மே 11

ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஈஸ்வரம்மா நினைவு விழாவும், சிறுவர் தினமும் நாளை ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியிலுள்ள சமித்தி மண்டபத்தில் நடைபெறும்.

[இ-த]

# இயக்கச்சிப் பகுதியிலிருந்து தினமும் மக்கள் இடம்பெயர்வு

தாளையடி, மே 11

இயக்கச்சி, கோவில்வயல், சங்கத்தார்வயல் ஆகிய இடங்களில் இருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து அடிக்கடி ஏவப்படும் ஷெல்களே இதற்குக் காரணமாகும்.

இப்பகுதிகளில் இருந்து வெளியேறியோரில் அனேகமானோர் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களுக்கு வந்துள்ளனர்.

முன்குறிப்பிட்ட பகுதிகளில் அடிக்கடி விமானக் குண்டுவீச்சுகளும் இடம்பெற்று வருகின்றன.

சமீபத்தில் இடம்பெற்ற அவ்ரோ விமானக் குண்டு வீச்சில் கோயில்வயல் பகுதியில் பெண் ஒருவர் மரணமாகி இருந்தார்.

[இ-144]

## றோட்டரக்ட் கழகம் அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், மே 11

யாழ். றோட்டரக்ட் கழகம் தனது சேவைத் திட்டத்தின் கீழ் பொது மக்களிடமிருந்து மதிய உணவுப் பொருள்களைப் பெற்று புனித ஜோன் பொஸ்கோவில் உள்ள அகதிகளுக்கு வழங்கியது.

[இ]

## மருத்துவ பீடப் பரீட்சையை கொழும்பில் நடத்த முயற்சி

கொழும்பு, மே 11

யாழ். பல்கலைக்கழகத்தின் எம். பி. பி எஸ். மூன்றாம் ஆண்டுப் பரீட்சையை கொழும்பில் நடத்துவது பற்றி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இடம் பெயர்ந்து கொழும்பில் தங்கியுள்ள மாணவர்களை, இது தொடர்பாக இம் மாதம் 13 ஆம் திகதி கொழும்பு, வார்ட் பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி ஆணைக்குழு கோரியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்தே மானிய ஆணைக்குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

[இ - எ]

## புலிகளால் நடத்தப்படும் நடமாடும் நிலையம் மூலம் நியாய விலையில் பொருள்

காங்கேசன்துறை, மே 11

விடுதலைப் புலிகளின் நடமாடும் விற்பனை நிலையம் மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருகிறது.

குடும்ப அட்டைக்கு சீனி, மா, சவர்க்காரம், தேங்காய் எண்ணெய், மண் எண்ணெய் போன்ற பொருள்கள் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்படுகின்றன.

கடந்த 6 ஆம் திகதி உடுவில் புளியடி வைரவர் ஆலய முன்றலிலும், 7 ஆம் திகதி மல்லாகம் கிறிஸ்தவ தேவாலய முன்றலிலும் சுமார் 800 குடும்ப அட்டைகளுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

[இ-68]

## பரிசுபெறும் ஊர்திகள்

யாழ்ப்பாணம், மே 11

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தொழிலாளர் தினக் கருத்து ஊர்திகளுக்கான பரிசு வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7-00 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட தலைமைச் செயலக கலையரங்கத்தில் நடைபெறும்.

பரிசுக்குரியவர்கள் நேரில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

பரிசு பெறும் ஐந்து ஊர்திகள் வருமாறு:-

1 ஆம் பரிசு — நாவாந்துறை [மீனவர் மீன்பிடிப்படகு]

2 ஆம் பரிசு — குருநகர் [மீனவர் மீன்பிடிப்படகு]

3 ஆம் பரிசு — அக்கராயன் வி [காவல் அரண்]

4 ஆம் பரிசு — [சண்டிலிப்பாய் வட்டகை]

5 ஆம் பரிசு — [வட்டுக்கோட்டை வட்டகை]

[இ]

## இலக்கை விட கூடுதலாக பனம் பொருள் உற்பத்தி

தென்மராட்சி, மே 11

சாவகச்சேரி தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினால் இம்முறை குறித்த இலக்கை விட கூடுதலாக பனம் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

பதநீர் உற்பத்தி இம்முறை அதிகரித்ததாலேயே வெல்ல உற்பத்தி அதிகரித்துள்ளதாக சங்க பொது முகாமையாளர் வேலு கிருஷ்ணன் தெரிவித்தார்.

[இ-117]

## வேலணை மக்களுக்காக யாழ். தபாற்கந்தோரில் விசேஷ கருமபீடம்

வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களின் வசதி கருதி யாழ். பிரதம தபாற்கந்தோரில் விசேஷ கருமபீடம் ஒன்று இயங்குகிறது.

வேலணை தபாலகத்தின் எல்லைக்கு உட்பட்ட மக்கள் கிழமை நாட்களில் காலை 9 00 மணியிலிருந்து தமக்கு உரிய கடிதங்களை இந்த விசேஷ கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-த]

## முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மே 11

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் 40 ஆம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றபோது விமானத் தாக்குதலில் ஒரு காலை இழந்த திரு. அ. சுகிர்தராஜா என்பவருக்கு முச்சக்கரவண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அத்துடன் சனசமூக நிலையத்தின் ... தொழிற்சாலைக்கு கடன் அடிப்படையில் ரூபா 5000/-மும், விவசாயக் குழுவுக்கு தண்ணீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்பட்டன.

மேற்படி உதவிகள் பாரதி சனசமூக நிலையத்தினதும், நல்லூர் ஒய்வூதிய சங்கத்தினதும் கூட்டுமுயற்சியால் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தி... வழங்கப்பட்டன.

[இ-த]

## சர்வோதயம் உதவி

தென்மராட்சி, மே 11

பச்சிலைப்பள்ளியிலுள்ள கணவனை இழந்த பெண்களுக்கு கிளிநொச்சி சர்வோதய இயக்கத்தினர் உலர் உணவுப் பொருள்களை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

[இ-117]

## நிரந்தர அலுவலகம்

மானிப்பாய், மே 11

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசத்துக்கென நிரந்தர அலுவலகம் ஒன்று சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில், அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

[இ-90]

## சம்பளம் இல்லை

தென்மராட்சி, மே 11

கைதடி அரச வைத்தியசாலைக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கடந்த ஜனவரி முதல் சம்பளம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

[இ-117]

## கஷ்ட பிரதேச அலவன்ஸ்

கொழும்பு, மே 11

கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் பிரதேச உதவிச் செயலாளர்களுக்கு மாத அலவன்ஸாக ஆயிரம் ரூபா கடந்த ஜனவரி முதல் வழங்கும்படி பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல மாகாண தலைமைச் செயலாளர்கள், மேலதிக அரச அதிபர்கள் ஆகியோரைப் பணித்துள்ளது.

[இ-எ]

## கிளிநொச்சி பாடசாலைகள்

தாளையடி, மே 11

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை இரண்டாம் தவணைக்காக திறக்கப்பட்டன.

[இ - 144]

## 25 வருட சேவைக்கு பாராட்டு

சாவகச்சேரி, மே 11

தென்மராட்சியில் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேல் சேவை செய்து வரும் ஐந்து கிராம சேவை அலுவலர்கள் உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

திருவாளர்கள் த. இரத்தினராசா, அ. ந. அருணாசலம், வ. கதிர்காமநாதன், சி. எஸ். கந்தசாமி, க. சின்னையா ஆகியோரே இந்த ஐவரும் ஆவர்.

[இ-31]

# உலகச் செய்திகள்

## உலக வங்கி சோவியத்துக்கு கதவடைப்பு

வாஷிங்டன், மே 11

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணயச்சபை ஆகியவற்றில் உறுப்பு நாடாகச் சேர்த்து கொள்ள சோவியத் யூனியன் சமர்ப்பித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சந்தைப்படுத்தும் பொருளாதார முறையை அறிமுகப்படுத்துவதில் மாஸ்கோ அரசு காட்டும் வேகம் போதாதென்று கூறி இரண்டு உலக நிதி நிறுவனங்களும் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-எ]

## வேட்பாளர் கைது

தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கேயம் தொகுதியில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்.

தீக்குளித்துத் தற்கொலை செய்து காங்கேயம் தொகுதியில் தேர்தலை நிறுத்தப் போவதாக அந்த வேட்பாளர் பகிரங்கமாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து, பொலீஸார் அவரைக் கைது செய்தனர்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா போட்டியிடும் இரண்டு சட்டசபைத் தொகுதிகளில் ஒன்று காங்கேயமும் ஆகும். பெரியார் மாவட்டத்தில் இத்தொகுதி உள்ளது. மற்றத் தொகுதி தர்மபுரி மாவட்டத்தில் உள்ளது.

## அமெரிக்காவில் இனக் கலவரம்

அமெரிக்காவில் இனக் கலவரம் வெடித்துள்ளது. அதனை ஒட்டி வாஷிங்டன் வடக்குப் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகையிலிருந்து சில மைல்கள் தூரத்தில் பெரும் இனக் கலவரம் தொடர்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டதை ஒட்டி ஏற்பட்ட கலவரத்தின் பின்னர் மிகப் பெரிய கலவரமாக இது வர்ணிக்கப்படுகிறது.

லத்தீன் அமெரிக்கர் ஒருவருக்கு எதிராக பொலீஸார் நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்தே இனக் குழப்பம் வெடித்துக் கலவரமாக மாறியதாகச் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

[அ]

## தென் ஆபிரிக்காவில் கலவரம்

ஜோகன்னஸ்பேர்க், மே 11

தென் ஆபிரிக்காவின் ஜோகன்னஸ்பேர்க் நகரில் நேற்று இடம்பெற்ற வன்செயல்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் அறுவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

[இ]

## போராளிகளால் அச்சுறுத்தல் இல்லை

பொதுத் தேர்தலின் போது தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு பேணப்படுவதில் ஈழப் போராளிகளால் அச்சுறுத்தல் தற்போது இல்லை என்ற நம்பிக்கை மத்திய அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக புதுடில்லியில் உள்துறை அமைச்சுச் செயலாளர் ராஜ்குமார் பார்கவா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியங்கூடல் ஆலயத்தில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், மே 11

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு ஆலய ஓடுகளைப் பிரித்து உட்புகுந்து, அங்கிருந்து மூலஸ்தான யந்திரத்தகடு, வலம்புரிச் சங்கு, பொன் நாகம், தங்க ஆபரணங்கள் போன்ற பல லட்சம் ரூபா பெறுமதிமிக்க பொருள்களை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

அப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து விட்டனர் என்பது தெரிந்ததே.

[521-ஒ]


## இராமியக் கலைகள்

கோலாட்டம், வசந்தன் ஆட்டம், அறுவடை நடனம், ஏற்றப் பாட்டு

இவைபோன்ற கிராமிய நடன நிகழ்ச்சிகளைக் கைவசம் வைத்திருப்போர் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

திருமறைக் கலா மன்றம்,
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி/4998]



## காவல் துறை
## பெண் காவலர் பதவிகள்

பெண் காவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. வயது எல்லை: 18 முதல் 25 வரை
2. உயரம்: 5 அடி 2 அங்குலம்
3. கல்வித் தகைமைகள்: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. [சாதாரணம்], க. பொ. த. [உயர் தரம்] வரை.

விண்ணப்பதாரர்கள் 15-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல் துறை

[ச-101]



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

O|L

தீவக மாணவர்களின் நலன் கருதி
இறுதி பிரிவு 7
DAY CLASSES
[8-30 — 1-30]

ஆரம்பம்:- 15 — 05 — 1991

மு. குறிப்பு:- 1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் பேசிக்கப்படுகின்றது.
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.

[சி-4928]



## NEW MASTER INSTITUTE

B. M. C. Lane - Jaffna

91 A/L PAPER CLASS
(Sat & Sun)

ஆரம்பம்: 12 - 05 - 1991 ஞாயிறு
காலை 10 மணி

PHY. — திரு. வர்ணம்
CHE. — திரு. தில்லை
BOT. — திரு செல்வநேசன்
ZOO. — திரு. நாகநாதன்
PURE / APPLIED } MATHS — திரு. கிருஸ்ணா

[சி/4923]


# குப்பிளானில் சூட்டுக்கு பெண் காயம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுப் பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குப்பிளானில் ஒரு பெண் காயமடைந்தார்.

மிளகாய் தோட்டம் ஒன்றில் புல் பிடுங்கிக் கொண்டிருந்த — குப்பிளானைச் சேர்ந்த — சுசிப்பிள்ளை பார்வதி [வயது 49] என்ற பெண்ணே காயமடைந்தவராவார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

[உ-15]

## சுழிபுரம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தன.

இந்த அமளியின் மத்தியில் வலந்தலையில் நிலைகொண்டுள்ள படையினர் அண்டிய கடற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மீனவர்களின் காவல் கொட்டில்களை தீவைத்து எரித்தனர்.

இந்தச் சம்பவங்களினால் பெரியபுலோ, தெல்லியான் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

[ஒ-28-15]

## விடுதலைப...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சாக்காடு பட்டினி கிடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதாரத் தடை மற்றும் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தலாம் என்பது இராணுவத்தின் கொள்கையாக உள்ளது.

இது எதிர்மாறான பலனையே அளிக்கும் என்பது தெளிவான ஒரு விஷயம்.

யாழ்ப்பாணத்தில் வயோதிபர் முதல் பெண்கள் வரை — பல்கலைக்கழக ஆசிரியர் முதல் குடும்பப் பெண்கள் வரை — அனைவருடனும் பேசினேன்.

அவர்கள் அனைவரும் ஆயுத மேந்தி இறுதி வரை போராடத் தயாராக உள்ளார்கள் என்பதை என்னால் அறிய முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் சமூகத்தின் பல பிரிவுகளும் விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கும் அவர்களின் கொள்கைகளுக்கும் தானாக முன்வந்து ஆதரவு அளிக்கின்றன.

இராணுவத்தினரின் நடவடிக்கைகளால் ஏற்படும் துன்பங்கள் மக்களை விடுதலைப் புலிகளின் பின்னால் அணிதிரள வைத்துள்ளன.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை நடத்தி மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்புடன், சிவில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தும் பொறுப்பையும் விடுதலைப் புலிகள் ஏற்றுள்ளார்கள் — என்று தெரிவித்துள்ளார்.

[உ-எ]

## வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

கொண்டு சென்றனர்.

அதேசமயம் காலையில் இருந்து மாலை வரை சினச் சடை விமானம், இரு பொம்மர்கள், இரு அவ்ரோ விமானங்கள், இரு ஹெலிகள் ஆகியன மாறி, மாறி குண்டுவீச்சுக்களையும், கலிபர் தாக்குதல்களையும் நடத்தின. நூற்றுக்கும் அதிகமான குண்டுகள் இப்பகுதியில் நேற்றுவீசப்பட்டன.

நேற்று முன்தினம் நடந்த கடும் சண்டையின் பின்னர் படையினர் மாதர்பணிக்கர் மகிழங்குளம் கூட்டுறவுக்கடையில் நிலை கொண்டிருந்தனர் என்று தெரிய வந்தது.

அன்று நடந்த சமரில் [illegible] என்ற [illegible] அடைந்தார்.

[ஓ]

24 வருடங்களின் பின்னர்

# சோவியத் அமைச்சர் இஸ்ரவேல் விஜயம்

டெல்அவிவ், மே 11

சோவியத் யூனியனின் வெளிவிவகார அமைச்சர், இஸ்ரவேலுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு பேச்சுக்களை நடத்தினார்.

1967 ஆம் ஆண்டு அரபு இஸ்ரவேல் போர் மூண்ட போது சோவியத் யூனியன் இஸ்ரவேலுடனான தனது ராஜீய உறவுகளை முறித்துக் கொண்டது. அதன் பின்னர் சோவியத் அமைச்சர் ஒருவர் இஸ்ரவேல் சென்றிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

இஸ்ரவேல் தான் ஆக்கிரமித்த பகுதிகளில், ரஷ்யாவிலிருந்து வரும் யூதர்களைக் குடியேற்றக் கூடாது என்று சோவியத் வெளிவிவகார அமைச்சர் சொன்னார்.

மத்திய கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ரஷ்யா பங்களிப்புச் செய்ய வேண்டுமானால், இஸ்ரவேலுடன் பூரண ராஜீக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இஸ்ரவேல் பிரதமர் ஷாமீர் தெரிவித்தார். ஆனால் சோவியத் யூனியன் எந்த முன் நிபந்தனையையும் ஏற்க மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

[அ]

# யானை தாக்கியதில் பச்சிளம் குழந்தை பலி!

## வவுனியாப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 11

வவுனியா, இரணை இலுப்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு காட்டு யானை தாக்கியதில் 6 மாத பெண் குழந்தை ஒன்று பலியானது.

அந்தக் குழந்தையின் தாய், தந்தை உட்பட மூவர் காயமடைந்து, யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;-

இக்குடும்பத்தின் இருவயது ஆண் குழந்தை ஒன்று கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் தவறுதலாக கிணற்றில் விழுந்து இறந்துவிட்டது. அந்தக் குழந்தையின் ஆத்ம சாந்திப் பூஜையில் பங்குபற்றி விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே யானையின் தாக்குதலுக்கு குடும்பத்தவர்கள் இலக்கானார்கள்.

பற்றைக்குள் இருந்து திடீரென வெளி வந்த யானை முதலில் தந்தையைத் தூக்கி எறிந்தது. பின்னர் தாயின் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கி நிலத்துடன் மோதியது.

பின் தாயைக் காலால் உதைத்து விழுத்தி உழக்கியது. தொடர்ந்து மற்றவர்களையும் அடித்துத் தாக்கியது.

இச் சம்பவத்தில் இவராசா கௌரீஸ்வரி [6 மாதம்] என்ற குழந்தையே மரணமானது.

சின்னையா இவராசா [வயது 34] அவரது மனைவி சரஸ்வதி [வயது 30] மற்றும் அவர்களுடன் கூடவந்த வெள்ளைச்சாமி தசரதன் [வயது 45] ஆகியோர் காயமடைந்தனர்

[உ-15]

## இன்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெட்டிகள் நேற்று மாலையே வாக்களிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. சகல வாக்களிப்பு நிலையங்களிலும் பலத்த பொலிஸ் — இராணுவ பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் முடிவுகள் 24 மணித்தியாலத்துக்குள் வெளிவந்துவிடும் என்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

[அ]

## மடு அகதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அணியின் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் குறித்தோ—

இனிமேல் அவர்களது நிவாரணப் பணிகளுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவது குறித்தோ இதுவரை எந்த அறிவிப்பையும் அரசு வெளியிடவில்லை.

ஐ. நா. தூதராலய அதிகாரிகள் ஏற்கனவே ஜனாதிபதியைச் சந்தித்து தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் பாதுகாப்பு உத்தரவாதம் தொடர்பாகவும் பேசியிருந்தனர். ஆனால் இன்னமும் ஜனாதிபதியின் பதில் கிடைக்காத நிலையில் அவர்கள் [illegible] ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

[ஓ-5]

# மிதிவெடியில் 4 சிறுவர்கள் காயம்

யாழ்ப்பாணம், மே 11

ஆனைக்கோட்டை வயல் பகுதிக்குப் பின்னால் உள்ள மணற் மேட்டுக்கு நேற்றுக் காலை நுங்கு எடுக்கச் சென்ற நான்கு சிறுவர்கள் மிதிவெடியில் சிக்கி காயமடைந்தனர்.

காயமுற்ற — ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டையைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் கணேஸ்வரன் [வயது 14], புவனேந்திரன் கஜேந்திரன் [வயது 10] ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மற்றும் இரு சிறுவர்கள் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

[உ-15]

# இளைஞர் குளத்தில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், மே 11

நெல்லியடிப் பகுதியில் குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

நேற்றுக்காலை 9மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வளைச் சேர்ந்த சிவலிங்கம் அருளானந்தம் [வயது 30] என்பவரே மரணமானார்.

[ஒ-எ]

# சந்திரசேகர் டாக்கா செல்கிறார்

பிரதமர் சந்திரசேகர் நாளை ஞாயிற்றுக்கிழமை பங்களா தேஷ் தலைநகர் டாக்கா செல்கிறார்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இ. இராஜரட்ணம்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி இராஜலக்ஷ்மி இராஜரட்ணம் [ஓய்வுபெற்ற ஆசிரியை மங்கையர்க்கரசி ம. வித். நல்லூர்] 8-5-91 இல் லண்டனில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா செரீனம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற போ. செ. இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும், ரஞ்ஜித், செல்வேந்திரனின் அன்புத் தாயாரும், யோகலக்ஷ்மி ஜெகதீசன், இராஜேஸ்வரி வைரவப்பிள்ளை, [கலிபோர்னியா], காலஞ்சென்ற சரவணபவன், இராஜகுமார் தேமிநாதன் [லண்டன்], சூரியகுமார் [டாக்டர்-லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [11-5-91] இன்று லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-

124, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

திரு. K S லோகேஸ்வரன்

[16793]

## சிவலிங்கம் அருளானந்தம்

காலஞ்சென்ற தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி அதிபர் சின்னையா - சிவலிங்கத்தின் அன்பு மகன் அருளானந்தம் [பாபு] 10-5-91 இல் அகாலமரணமடைந்துவிட்டார். இவர் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சிவலிங்கம் பூபதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கிருபைக்குகன், சிவநேசகுகன், சிவராணி, விவேகானந்தன் [பாப்பா-சவூதி அரேபியா], சோமநாதன் [லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்]. சிவபூபதியின் அன்புச் சகோதரரும் புவிமன்னசிங்கத்தின் [சாந்தி அச்சகம்] மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் [11-5 91] இன்று சனிக்கிழமை பிற்பகல் மில்லேன் மல்லாகத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

பூபதி [தாய்]
புவிமன்னசிங்கம் [மைத்துனர்]

மில் ஒழுங்கை,
மல்லாகம்

[16710]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org